# குழந்தைத் தொழிலாளர்கள்

# Child Labour

**1.இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களுக்கான அரசியலமைப்பு சரத்துகள்:**

1. **சரத்து 21ன் படி**

   தனிமனித வாழ்க்கைக்கும், தனிமனித சுதந்திரத்திற்கும் போதியச் சட்டப்பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

2. **சரத்து 21Aன் படி**

   இந்தியாவிலுள்ள 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும்

3. **சரத்து 23ன் படி**

   இந்திய மக்களுக்குச் சுரண்டலுக்கு எதிரான உரிமையை அளிக்கிறது. ‘மனித வியாபாரம்’ எனப்படும் ஆண்கள், குழந்தைகள், பெண்கள் இவர்களைப் பொருட்கள் போன்று வாங்கவோ விற்கவோ கூடாது.

4. **சரத்து 24ன் படி**

   குழந்தைகளைப் பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது.

5. **சரத்து 39(e)ன் படி – உடல் நலம் (ம) வலிமை**

   ஆண், பெண் (ம) குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான கொடுமையான தடை செய்வதுடன்,அவர்களுக்கான உடல் நலம் (ம) வலிமையை உறுதி செய்கிறது.

6. **சரத்து 38(f)ன் படி – ஆரோக்கிய சூழல் (ம) சுதந்திர வாழ்வு**

   ஆரோக்கியமான சூழ்நிலையில் வளர்வதற்கும், மரியாதையான சுதந்திர வாழ்விற்குமான வசதிகளையும், வாய்ப்புகளையும் அரசு உருவாக்கித் தருதல் வேண்டும்.

7. **சரத்து 45ன் படி**

   6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல் (ம) அவர்களைப் பராமரித்தல் - (86வது திருத்தம் 2002)

8. **சரத்து 51A(K) ன் படி**

   6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளின் பெற்றோர்களோ, காப்பாளர்களோ, அக்குழந்தைக்கு கல்வி கற்கும் வாய்ப்பளிப்பது அடிப்படைக் கடமையாகும் - 86 வது திருத்தம் 2002

## 2. குழந்தை தொழிலாளர்

### குழந்தை தொழிலாளர்

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 14 வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தையாக இருந்தாலும், நாள் ஒன்றுக்கு அதிக மணி நேரம் வேலைசெய்யப்படுதல் குழந்தை தொழிலாளர் முறையாகும்.

### குழந்தை தொழிலாளர்களின் வேலையின் நிலைகள்

1. **மனிதாபிமானமற்ற நிலை**

   குழந்தை தொழிலாளர்கள் சுகாதாரமற்ற சூழ்நிலை (ம) சிறிய அறைகளில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

2. **ஆபத்தான நிலைமை**
   1. மிக அபாயகரமான இராசயன உலைகளின் அருகே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.
   2. 1400 சென்டிகிரேட் உயர்வெப்பநிலை உடைய அடுப்புகளின் அருகே கூட பணிசெய்கின்றனர்.

3. **மாசுபாடு உள்ள தொழிற்சாலை**

   பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் மாசுபட்டத் தொழிற்சாலைகளில் அருவெறுப்பான துர்நாற்றத்தில் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

4. **நீண்டகால வேலை**

   ஒரு நாளைக்கு 10 முதல் 11 மணி நேரம் நீண்டநேர வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

5. **குறைவான ஊதியம்**

   குழந்தைத் தொழிலாளர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது.

6. **இழப்பீடு இல்லை**

   குழந்தைத் தொழிலாளர்களுக்கு உடலில் பாதிப்பு ஏற்பட்டாலோ, (அ) ஊனம் அடைந்தாலோ இழப்பீடு இல்லை.

7. **சத்துகுறைந்த உணவு**

   பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் சத்து குறைவான உணவையே உட்கொள்கின்றனர்.

8. **வலிமையற்ற உடல்நிலை**
   1. குழந்தைத் தொழிலாளர்களின் உடல் (ம) எலும்பு மெல்லிய உடையக்கூடிய நிலையில் உள்ளது. சீரான உடல் நிலையில் அவர்கள் இல்லை.

2. ஆடைகள் முரட்டுத் துணியினால் சரியான அளவுக்கு தைக்கப்படாமல் இருக்கும்.

**9. கடின உடல் உழைப்பு**

20 வயதுக்கு குறைவானவர்கள் செய்யக்கூடாத கடினமான உடல் உழைப்பு வேலையை செய்ய அவர்கள் உந்தப்படுகின்றனர்.

**10. சுகாதார ஆபத்து**

கண்ணாடி தொழிற்சாலை, பீடி தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைகளுக்கு தோல்நோய், சுவாசநோய். காசநோய் ஏற்படும்.

**11. கொத்தடிமை தொழிலாளர்**

யாரோ ஒருவர், மற்றொரு நபரின் கட்டுப்பாட்டில் தன் சுதந்திரத்தை இழந்து செய்யப்படும் நிலை.

**3. இந்தியா (ம) தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களின் நிலை**

1. குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றிய, மிக துல்லியமான கணக்கெடுப்பு என்பது இயலாத ஒன்றாகும்.
2. ஏனெனில் தன் சுயலாபத்திற்காக பல குழந்தைத் தொழிலாளர்கள் மறுக்கப்பட்டோ (அ) மறைக்கப்பட்டோ வைக்கப்பட்டுள்ளனர்.
3. உலகில் 250 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.

**இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள் நிலை (12 மில்லியன்)**

1. இந்தியாவில் 12 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர்.
2. இந்நிலையில் இந்தியாவில் இளம் குற்றவாளிகள் உருவாகும் சூழல் ஏற்படுகிறது.
3. யூனிசெ.ஃப் ஆய்வறிக்கைப்படி, உலக நாடுகளிலேயே இந்தியாவில் மட்டும் 17% குழந்தைத் தொழிலாளர்களின் வயது 15 வயதிற்குள் உள்ளது.
4. 12 வயது முதல் 15 வயது உட்பட்ட பெண் குழந்தைத் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட வருமானத்தில் வீட்டு வேலைச் செய்யவும் (ம) வீட்டு வேலைகளில் உதவிபுரியும் நிலையிலும் உள்னர்.
5. **5 – 14 வயது**

| மக்கள் தொகை கணக்கெடுப்பு | |
|---|---|
| 2001 | 12.5 மில்லியன் |
| 2011 | 4.35 மில்லியன் |

**தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்களின் நிலை (2.84 லட்சம்)**

- **i.** தமிழ்நாட்டில் 5 முதல் 14 இடையிலான வயதில் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று UNICEF குறிப்பிட்டுள்ளது.
- **ii.**

| ஆண்டு | குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை |
|---|---|
| 1981 | 9.75 லட்சம் |
| 2011 | 2.84 லட்சம் |

**4. குழந்தைத்தொழிலாளர் நிலைக்கான காரணங்கள் யாவை?**

1. **வறுமை**
   - **i.** இந்தியாவில் வறுமை 21.9%
   - **ii.** வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு குழந்தைகளின் வருமானம் பெரும் பயனளிப்பதாக உள்ளது.
2. **பெரிய குடும்பங்களும் மக்கள்தொகை உயர்வும்**
   - **i.** இந்தியாவில் கிராமப்புறங்களில் பெரிய குடும்பங்கள் காணப்படுகின்றன.
   - **ii.** குடும்ப வருமானம் மிக குறுகிய அளவில் உள்ளதால் குழந்தைகள் வளரும் நிலையிலேயே குடும்ப வருமானத்திற்காக வேலைக்கு செல்கின்றன.
3. **எளிதில் கிடைக்கும் தொழிலாளர்கள்**
   - **i.** இயந்திரமயமாதல் (ம) புதிய அறிவியல் தொழில் நுட்பங்கள் காரணமாக விரைவாக வேலையை முடிக்க எண்ணுகின்றனர்.
   - **ii.** குறைவான முதலீட்டில் அதிக லாபம் பெற குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.
4. **குழந்தைத் தொழிலாளர் தன்மைகள்**
   - **i.** குழந்தை தொழிலாளர்களுக்கு குறைவான ஊதியம் போதும்
   - **ii.** அதிக நேரம் வேலை வாங்க முடியும்
   - **iii.** யூனியன் அமைக்கவோ வேலை நிறுத்தத்தில் ஈடுபடவோ மாட்டார்கள்
   - **iv.** குழந்தைகள் எதிர்ப்பைக் காட்டுவில்லை

5. **சமூக அங்கிகாரம்**

   i. சமுதாயத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை தவறு என்ற எண்ணம் ஏற்படவில்லை.

   ii. முதலாளிகளும் பெற்றோர்களும் அது சரியானது என்றே கருதுகின்றனர்.

6. **எழுத்தறிவின்மை –26%**

   படிப்பறிவில்லாத பெற்றோர்களுக்கு ஒரு குழந்தையின் சரியான உடல் வளர்ச்சி (ம) புலனுணர்வு உணர்ச்சியின் வளர்ச்சித் தேவை பற்றித் தெரியவில்லை.

7. **நகரமயமாக்கல் - 25% மக்கள்தொகை**

   வளரும் நாடுகளில் நகரமயமாக்கல் முறைமையின் மூலம் பன்னாட்டு நிறுவனங்களில் (ம) ஏற்றுமதி தொழில்களில் குறிப்பாக ஆடைத் தொழிற்துறையில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.

8. **மற்ற காரணிகள்**

   குறைந்த இலாபம் (ம) சிறிய அவிலான குடும்ப நிறுவன உற்பத்தி தொழிலில் வயது வந்தோர் தொழிலாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவதில் பற்றாக்குறை ஏற்படுதல்.

## 6. குழந்தைத் தொழிலாளர் நிலையின் விளைவுகள்:

1. குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகுதல் வருங்காலத் தேசிய மனித வளங்களின் திருட்டு என அழைக்கப்படுகிறது.
2. குழந்தைத் தொழிலாளர் முறையினால் மிக கொடூரமான, எதிர்கால பண இழப்புகள் அடிப்படையில் மிகப்பெரிய அனைத்து வகை ஊழலும்ட நடைபெறும்.
3. HIV / AIDS, போதை மருந்து பழக்கம், மனநோய் போன்றவை குழந்தைத் தொழிலாளர்களுக்கு பொதுவானதாக இருக்கிறது.
4. குழந்தைத் தொழிலாளராக இருந்த காரணத்தினால் நீண்டகால உடல் நலக் குறைபாடு ஏற்படும்.
5. குழந்தைகளின் மனம், கல்வி, உடல் வளர்ச்சி போன்றவை பாதிப்படையும்.
6. அபாயகரமான தொழிற்சாலையில் தொழிலாளர்களாக இருப்பதால், அவர்களின் வாழ்நாள் மிகவும் குறுகியதாக மாறுகிறது.

7. அவர்களின் வருமானம் எந்த வீதத்திலும், நாட்டின் வருவாயில் காட்டப்படுவதில்லை, சுரண்டப்படுகிறது.

5.**இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களை குறைப்பதற்காகன சட்டங்கள் (ம) திட்டங்கள் பற்றி எழுதுக.**

**<u>அரசின் சட்டங்கள்</u>**

**1.தொழிற்சாலை சட்டம் - 1948 – 14 yrs**

14 வயதிற்குள் உள்ள குழந்தைகளை தொழிற்சாலையில் வேலைக்கு வைப்பதை தடை செய்கிறது.

**2.பயிற்றுநர் சட்டம் - 1961 – 14 yrs**

எந்த நபரும் 14 வயதிற்குள் இருக்கும் குழந்தைகளுக்கு தொழில் பயிற்சி தருவதை தடை செய்கிறது.

**3.பெருந்தோட்டத் தொழிலாளர் சட்டம் - 1951**

இச்சட்டம் பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனுக்காக கொண்டு வரப்பட்டது.

**4. சுரங்கத் தொழில் சட்டம் - 1952 – 18 yrs**

18 வயதிற்குள் உள்ளவர்களை சுரங்கத்தொழிலில் ஈடுபடுத்தக்கூடாது என இச்சட்டத்தால் வரையறுக்கப்பட்டு உள்ளது.

**5. குழந்தைத் தொழிலாளர் ஒழுங்குமுறை (ம) தடைச்சட்டம் - 1986 – 14 yrs**

i. இச்சட்டப்படி 14 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தை.

ii. இது 16 வகையான தொழில்கள் (ம) 65 செயல் முறைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதை தடை செய்கிறது.

**6. போக்குவரத்து வாகன தொழிலாளர் சட்டம் 1961 –14 yrs**

14 வயதிற்குள் உள்ளவர்களை போக்குவரத்து வாகன தொழிலாளிகளாக செயல்படுவதை தடை செய்கிறது.

**7. பீடி (ம) சுருட்டு தொழிலாளர் சட்டம் - 1966 14 yrs**

14 வயதிற்குள் உள்ளவர்களை பீடி (ம) சுருட்டு தொழிலாளர்கள் வேலைக்கு வைப்பதை தடை செய்கிறது.

**8. தமிழ்நாடு கடைகள் (ம) நிறுவனங்கள் சட்டம் 1947 –14 yrs**

14 வயதிற்குள் உள்ளவர்களை இச்சட்டப்படி, பணியில் அமர்த்தக் கூடாது.

**9. தமிழ்நாடு கேட்ரிங் நிறுவனங்கள் தொழிலாளர் சட்டம் 1958 – 16 yrs**

16 வயதிற்குள் உள்ளவர்களை பணிசெய்ய தடை செய்கிறது.

**10. தமிழ்நாடு கைத்தறி நெசவுத்தொழிலாளர் சட்டம் - 1981**

**11. தமிழ்நாடு கைவினைத்தொழிலாளர் சட்டம் - 1982**

16 வயதிற்குள் உள்ளவர்களை பணியமர்த்த தடை செய்கிறது. குழந்தைத் தொழிலாளர்களின் சமூக நோயை எதிர்த்துப் போராடுவதில் இந்தியாவின் முயற்சிகள் விவாதிக்கவும்.

12. **இளம் குழந்தைகளின் அரவணைப்பு (ம) பாதுகாப்பு நீதிச்சட்டம் - 2000**

குழந்தைகளை தொழிலாளர்களாகவோ (அ) கொத்தடிமைகளாகவோ வேலைக்கு வைத்திருத்தால், அவர்கள் மீது குற்ற நடவடிக்கையின் அடிப்படையில் சிறைத்தண்டனை கிடைக்கும்.

**13. கல்வி உரிமை சட்டம் - 2009**

**i.** இச்சட்டத்தின் படி 6 – 14 வயது குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**ii.** தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடும், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கட்டாய ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது.

**அரசின் திட்டங்கள்:**

**1. குழந்தைகளுக்கான உதவி எண் - 1098**

**i.** இது கட்டணமில்லாத தொலைபேசி எண்

**ii.** குழந்தைகளின் நலவாழ்வினை உறுதிப்படுத்த விழிப்புணர்வு (ம) ஆலோசனையை வழங்கிவருகிறது.

**2. சிசு கிரே திட்டம் - 6 laksh / 10 child மானியம்**

**i.** இது குழந்தைத் தத்தெடுப்பை வலியுறுத்தும் திட்டம்

**ii.** 10 குழந்தைகளுக்கான மானியமாக 6 லட்சம் ரூபாய் என அரசால் வழங்கப்பட்டது.

**3. குழந்தைகளுக்கான பட்ஜெட்**

குழந்தைகளின் சில சிறப்புத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு செலவினங்களுக்காக தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.

**4. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் - 1975**

0 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து (ம) சுகாதார நிலையை மேம்படுத்துதல்.

**5. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் - 1988:**

i. இத்திட்டம் நாட்டின் குழந்தைத் தொழிலாளர் கொள்கை 1987 ன் கீழ் செயல்பட்டு வருகிறது.
ii. இத்திட்டத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிட, மாவட்ட ஆட்சியர் / மாவட்ட நீதிபதி ஆகிய தலைமைப் பதவியில் உள்ளவர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
iii. மேலும் NGO க்களும் பங்கு பெறுவர்

**நோக்கம்:**

1. குந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவி செய்து, அவர்களின கல்விக்காக சிறப்பு பள்ளிகளில் 50 குழந்தைகள் சேர்ந்து கல்வி கற்றிட உதவி புரிகின்றன.
2. ஒவ்வொரு குழந்தைக்குமான பராமரிப்பு செலவு.

   ஊக்கத் தொகை - ரூ100

   வளர்ச்சித் தொகை- ரூ100

   மதிய உணவு - ரூ5
6. குழந்தைகளுக்கான உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் - 2005
8. **குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு திட்டத்தின் குறைபாடுகள் :**
   i. அரசு குழந்தைத்தொழிலாளர் பிரச்சனையின் பூதாகர அளவினை சரிவர உணர்ந்து கொள்ளவில்லை.
   ii. ஒவ்வொரு ஆண்டும் 20 லட்சம் குழந்தைகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது இயலாத காரியம்.
   iii. விவசாயத்தில் நவீன முறைகளும், இயந்திரமயமாக்கலும் மேலும் மேலும் கிராமப்புறக் குழந்தைகளை வேலைத்தேடி நகரங்களுக்கு இடம்பெயர வைக்கிறது.
   iv. தீங்கு விளைவிக்கும் தொழில்கள் எவையென்பது தெளிவாக்கப்படாமல் உள்ளது.
   v. குழந்தைத்தொழிலாளர்களை மலிவான கூலிக்கு வேலையில் அமர்த்தும் முதலாளிகளை தண்டிப்பதற்கான சட்டங்கள் ஏதும் உருவாகவில்லை.
   vi. குழந்தைத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அதிகாரிகள் நமது கடமைகளை சரிவர நிறைவேற்றவில்லை.

vii. அமைப்புச்சாராத் துறைகளைச் சேர்ந்த வீட்டுவேலை செய்வோர், கந்தல் பொறுக்குவோர், பத்திரிக்கை விற்போர், விவசாயக் கூலிகள் போன்ற தெழிலில் உள்ளவர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் கிடைக்கவில்லை.

viii. வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு தரப்பட்ட முன்னுரிமைகள் இங்கு தரப்படவில்லை.

ix. இத்திட்டங்களில் தீங்கிழைக்கம் தொழில்கள் எவை என்பது குறித்த சரியான வரையறை இல்லை.

x. குறைந்த சம்பளத்தில் புகார்கள் ஏதும் கூறாத, ஏழைச்சிறார்களைப் பணியில் அமர்த்துவதையே முதலாளிகள் விரும்புகின்றனர்.

xi. அடையாளம் காண்பதில் உள்ள குறைபாடுகள்

**வழிமுறைகள்:**

1. சட்டத்தை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்
2. வறுமை ஒழிப்பு
3. ஏற்றத்தாழ்வுகள் ஒழிப்பு
4. விவசாயத் துறையில் சீர்த்திருத்தங்கள்
5. வேலைவாய்ப்புகள் அதிகரித்தல்
6. புதிய தொழில் நுட்பங்ளை பரப்புதல்
7. கூட்டுறவு இயக்கங்களை முடுக்கிவிடுதல்
8. சமூக நலத்திட்டங்களை அமல்படுத்துதல்
9. 1996 ல் உச்சநீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுதல்களை பின்பற்றுதல்
10. NGO பயன்பாடு
11. தொழில் கூடங்களை கண்காணிக்க அடிக்கடி உரிய சோதனை செய்தல்

**6. குழந்தைத்தொழிலாளர் குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பு:**

1996ல் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், ஆபத்து நிறைந்த தொழில்களிலிருந்து எவ்வாறு குழந்தை தொழிலாளர்கள் நீக்கப்பட வேண்டும் (ம) மறுவாழ்வு அமைப்பு பற்றியும் சில செயல்முறைகளை வழங்கியது.

**வழிகாட்டு நெறிமுறைகள்:**

i. ஆபத்து நிறைந்த தொழில்களில் பணி செய்யும் குழந்தைகள் பற்றிய ஆய்வு 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

**ii.** இந்த சட்டத்திற்கு புறம்பாக குற்றம் இழைக்கும் பணிநியமன அமைப்பு / அமைப்பாளர், தீங்கிழைக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தை தொழிலாளிக்கும் ரூ 20,000 நஷ்ட ஈடுத்தரவேண்டும்.

**iii.** ஆபத்து நிறைந்த பணிகளிலிருந்து நீக்கப்படும் ஒவ்வொரு குழந்தை தொழிலாளிக்குப் பதிலாக, அவர் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு பணி வழங்க வேண்டும் (அ)

**iv.** ரூ 5000 தொடர்புடைய அரசாங்கம் வழங்க வேண்டும்.

**v.** தொழிலில் இருந்து நீக்கப்பட்ட குழந்தைக்கு தக்க கல்வி கூடத்தில் கல்வி வழங்க வேண்டும்.

**vi.** குழந்தைகள் மறுவாழ்வு நலநிதியம் உருவாக்க வேண்டும்.

**vii.** தொழிலாளர்துறை அமைச்சகத்தில் ஒரு தனிப்பிரிவை உருவாக்க வேண்டும்.

**viii.** தீங்கு இழைக்காத பிறதொழில்களில் பணிநேரம் 4 – 6 மணி நேரத்திற்கு மிகக்கூடாது.

**ix.** மேலும் குறைந்தபட்சம் 2 மணி நேரம் குழந்தைகளை பள்ளி செல்ல அனுமதிக்க வேண்டும்.

**x.** இந்த நெறிமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு தண்டனை வழங்கப்படும்.

**7. தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் பற்றி எழுதுக.**

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம்

தோற்றம் உரிமைகள்

1. குழந்தைகள் பாதுகாப்புச் சட்டம் 2005ன் படி உருவாக்கம்
2. 2007 சட் அந்தஸ்து

**நோக்கங்கள்:**

i. 2 மில்லியன் குழந்தைகள் பயன்பெறுதல்
ii. நிதியுதவி : 850 கோடி
iii. குழந்தை தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்
iv. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 15000 பள்ளிகளில் அவர்களுக்கு கல்வி அளித்தல்
v. அபாயகரமான தொழில்களில் இருந்து விலகும் குழந்தையின் குடும்பத்திற்கு நஷ்டஈடு அளித்தல்

**அமைப்பு:**

1. பாராளுமன்ற சட்டத்தால் உருவாக்கம்
2. தன்னாட்சி அமைப்பு
3. தலைமையகம் டெல்லி

**செயல்பாடுகள்**

குழந்தைகளின் உரிமைகள்

**8. குழந்தைகள் நலனுக்கான தேசியக் கொள்கை :**

**தேசிய குழந்தைதொழிலாளர் கொள்கை – 1987**

**நோக்கங்கள்:**

1. குழந்தை தொழிலாளர்களின் வேலைநேரத்தை குறைத்தல்
2. குறைந்தபட்ச ஊதியத்தை உறுதி செய்தல்
3. கல்வி (ம) நலவாழ்வு வசதிகளை ஏற்படுத்தி தருதல்

**முக்கிய அம்சங்கள்:**

**i.** குழந்தை தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்த சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்.

**ii.** குழந்தை தொழிலாளர் (ம) அவரது குடும்பத்தினருக்கான பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்துதல்.

**iii.** செயல்முறை திட்டங்களை வகுத்தல்.

**விளைவுகள்:**

**தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம்**

1987 கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு 1993, அக்டோபர் 2ல் ஆணையம் அமைக்கப்பட்டது.

**நலதிட்ட அமைப்புகள்:**

**i.** இத்திட்டத்தின் படி 12 தேசிய குழந்தை தொழிலாளர் நல அமைப்புத் திட்டங்கள் 7வது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டன.

**ii. 1996 உச்சநீதிமன்ற தீர்ப்பு**

இத்தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு 64 வட்டார திட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

**iii. குழந்தை தொழிலாளர் திட்டம் - 1988**

**தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கை – 2013**

**நோக்கங்கள்**

1. 18 வயதிற்கு கீழ் உள்ளவர்களை இது குழந்தைகள் என வரையறுக்கிறது.
2. குழந்தைப் பருவம் வாழ்வின் ஒருபகுதி, அதற்கு தனி மதிப்பு உள்ளது.
3. குழந்தைகளை பல்வேறு பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து மீட்டல்
4. குழந்தைகளின் ஒட்டுமொத்த இசைவான வளர்ச்சி (ம) பாதுகாப்பிற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையை அளித்தல்

**முக்கிய அம்சங்கள்:**

1. ஒவ்வொருக் குழந்தையும் தனித்தன்மை வாய்ந்த மேலான (ம) தேசத்தின் முக்கிய சொத்தாகும்.
2. பாகுபாட்டிற்கு காரணமான நிலைகளை குறைக்க சிறப்பு நடவடிக்கைகள் அவசியம்
3. குடும்பச் சூழ்நிலையில் குழந்தைகள் வளர்தல், மகிழ்ச்சியான சூழலில் வாழ்தல் என பல உரிமைகள் குழந்தைகளுக்கு உண்டு.
4. குழந்தைகளை வளர்ப்பதில், பராமரித்தலில் குடும்பங்களுக்கு ஒரு வலிமையான சமூக பாதுகாப்பு வலையமைப்பு ஆதரவு அளிக்கிறது.

# Poverty

**1. வறுமை வரையறு வறுமையின் வகைகள் (ம) வறுமைக்கோடு பற்றி குறிப்பு வரைக. 2011ன் படி 21.9%**

**வறுமை**

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாத அளவிற்கு சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகள் வறுமையாகும்.

**வறுமையின் வகைகள்:**

1. முழுவறுமை (ம) ஒப்பீட்டு வறுமை
2. தற்காலிக வறுமை (ம) முற்றிய வறுமை
3. முதல் நிலை (ம) இரண்டாம்நிலை வறுமை
4. கிராமப்புற (ம) நகர்ப்புற வறுமை

**1. முழு வறுமை**

i. அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் இல்லாமல் வாழும் சூழல்

ii. இந்தியாவில் வறுமையின் விகிதம்

**2. ஒப்பீட்டு வறுமை**

i. வருமான ஏற்றத்தாழ்வுகளை கணக்கிடுகிறது.

ii. சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுகிறது.

iii. அதிக வருமானம் ஈட்டக்கூடிய 5% முதல் 10% மக்களோடு, குறைந்த வருமானம் ஈட்டக்கூடிய 5% முதல் 10% மக்களை ஒப்பிட்டு பார்ப்பது.

**3. தற்காலிக வறுமை**

இந்தியா போன்ற நாடுகளில் பருவமழை குறையும்போது, விவசாயம் பொய்த்து, அதனால் உழவர்கள் தற்காலிகமான ஏழ்மைநிலையில் உழல்கிறார்கள்.

**4. முற்றியவறுமை**

விவசாயம் பொய்த்து, அதே நிலையில் அவர்கள் நீண்ட காலமாக வாழும்போது, அந்நிலை முற்றிய வறுமை எனப்படுகிறது.

**5. முதல்நிலை வறுமை**

**ரவுண்டிரி என்பார் கூற்றுப்படி (ரவுண்டிரி)**

குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த சம்பாத்தியங்களைக் கொண்டு, குறைந்தபட்ச, அத்தியாவசிய பொருட்களைக் கூட வாங்க முடியாத பற்றாக்குறையான நிலையாகும்.

**6. இரண்டாம் நிலை வறுமை**

- **i.** குடும்பங்களின் சம்பாத்தியம், வாழ்க்கை நடத்த போதுமானதாக இருக்கும்.
- **ii.** ஆனால் அதன் ஒரு பகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்கான (ம) திறமையற்ற குடும்ப நிர்வாகம் போன்றவைகள் வீணான செலவுகளுள் சிலவாகும்.

**7. கிராமப்புற வறுமை**

- **i.** கிராமங்களில் வாழும் பெரும்பான்மையான ஏழை மக்கள் நிலங்களை சொந்தமாக பெற்றிராமல், விவசாய தினக் கூலிகளாகவே வேலை செய்கிறார்கள்.
- **ii.** அவர்களது கூலியும் குறைவு, ஆண்டின் சில மாதங்களே அவர்கள் வேலைவாய்ப்பை பெறுகிறார்கள்.

**8. நகர்ப்புற வறுமை**

- **i.** நகர்ப்புறங்களில் வாழும் ஏழை மக்கள் நீண்ட நேரம் உழைத்து, மிகக் குறைவான வருமானத்தையே பெறுகிறார்கள்.
- **ii.** பெரும்பாலானோர் அங்கீகாரம் பெறாத (ம) ஒழுங்குமுறைப்படி அமையாத துறைகளிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள்.

**2. வறுமைக்கான காரணங்களை விவரி:**

**சமூக காரணங்கள்**


1. கல்வியறிவின்மை
2. வேலைவாய்ப்பின்மை
3. திறன் குறைவு
4. மக்கள் தொகை பெருக்கம்
5. மதம் (ம) சமூகம் சார்ந்த மேலாண்மை
6. தன்னிறைவு அணுகுமுறையில் சமரசம் அடைதல்
7. அன்னிய ஆதிக்கம்
8. ஜாதி பிரிவுகளால் ஏற்பட்ட சுரண்டல்கள்
9. தொழில்நுட்ப அறிவின்மை

10. நிலச்சுரண்டல் முறை
11. இந்திய – பாகிஸ்தான், இந்திய – சீனப் போர்

**பொருளாதாரக் காரணங்கள்:**

1. பணவீக்கம்
2. பொருளாதாரத்தில் குறைந்த உள்ளடக்கிய வளர்ச்சி
3. செல்வங்கள் சமமற்ற நிலையில் பங்கீடுதல்
4. உற்பத்தித்திறன் குறைவு
5. முதன்மைத் துறையில் காலாச்சார முக்கியத்துவம்
6. திறமையான பணியாளர்கள் குறைவு
7. குறைவான முதலீடு

3. **வறுமையின் சுழற்சியை விவரி:**




4. **வறுமைக்கு தனிப்பட்ட மனிதனின் காரணம் என்ன?**

**தனிப்பட்ட மனிதர்கள்**

**டேவிட் எலீஷ் விளக்கத்தின் படி,**

1. ஒரு தனிமனிதன் வறுமைக்கு காரணம் அவனுக்குள்ளேயே இருக்கிறது என தனிமனிதத்துவம் குறித்த கோட்பாடு கூறுகின்றது.
2. ஒரு மனிதன் வறுமையில் வாடுகிறான் என்றால், அது அவனது சோம்பேறித்தனம், ஆர்வமின்மை, திறனின்மை, முயற்சியின்மை ஆகியவற்றால் விளைந்த அவனது சொந்த தவறே ஆகும்.
3. ஒரு மனிதனின் வெற்றிக்கு அவனது தனிப்பட்ட கடின உழைப்பு, திறன், நேர்மை ஆகியவை காரணமாக என்கிறது.
4. ஒரு மனிதன் தோல்வி அடைந்தால் தன்னைத்தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டும் வேறு யாரையும் குறை கூறக்கூடாது.

5. ஒரு நல்ல உத்தியோகம், நிலையான வருமானம், குறிப்பிடத்தக்க பொருளுடைமை கொண்டுள்ள நடுத்தர வர்க்கத்தினரே. பொதுவாக ஏழை மக்களின் வறுமைக்கு அவர்களே காரணம் என ஒத்துக் கொள்கின்றனர்.
6. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு நபர், தான் மிகவும் போராடி வெற்றி பெற்றதாகவும், ஏழைகளால் அவ்வாறு முடிவதில்லை.
7. இதற்கு காரணம் அவர்களிடம் ஏதோ தவறு உள்ளது என குறிப்பிடுகிறார்.
8. ஒரு மனிதன் சோம்பேறித்தனம், திறமையின்மை, வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளாமல் வாழ்ந்தால் அதற்கு அவனே பொறுப்பாவான்.
9. இவர்களை முன்னேற்ற எந்த வழியும் இல்லை.
10. வறுமையில் வாழ்ந்தாலும். தோல்விகளை சந்தித்தாலும், வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என போராடுபவனே சிறந்த நிலையை எட்டமுடியும்.

**4. வறுமையின் காரணமாக உருவாகும் துணைக்கலாச்சாரம் பற்றி எழுதுக.**

**வறுமையின் துணை கலாச்சாரம்**

1. வறுமை என்பது பாரம்பரியமாகத் தொடருமானால் அது ஒரு கலாச்சாரமாக மாறி விடுகிறது என்று ஆஸ்கர் லூயிஸ் குறிப்பிடுகிறார்.
2. **கிரீஸ்பெர்க் குறிப்பிடுவது**

   ஒவ்வொரு தலைமுறையிலும் ஏழைகளின் குடும்ப உறுப்பினர்கள் அடுத்தடுத்து முக்கியமான நிலைகளுக்கு முன்னேறி வந்துள்ள போதிலும், அடுத்தடுத்த சந்ததிகள் தங்களது பழக்க வழக்கங்கள், மதிப்புகளில் தங்கள் ஏழ்மையில் இருந்து வந்திருப்பதையும், இதே போன்றே சமூக அழுத்தங்களுக்கு உட்பட்டு வந்திருப்பதையும் உணர்த்தவே செய்கின்றனர்.
3. ஏழைகளின் குழந்தைகள் வன்முறை என்ற துணை கலாச்சாரத்தை பெற்று விடுகின்றனர்.
4. இதன் வாயிலாக உடல் அளவில் மூர்க்கமான பதில் நடவடிக்கைகள் எதிர்பார்க்கலாம் (அ) இந்தக் குணம் வளரவேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களும் எதிர்பார்க்கின்றனர்.
5. அத்தகைய துணைக்கலாச்சாரத்தில் பிரயோகிக்கப்படும் வன்முறையானது குற்ற நடவடிக்கையாகக் கருதப்படுவதில்லை.
6. அந்தக் குணாதிசயத்தைப் பிரதி பலிப்பவர்கள் தங்களுடைய மூர்க்க குணத்திற்காக குற்ற உணர்ச்சி கொள்வதில்லை.
7. அரசியல் வாதிகள் (ம) பொதுமக்களால் இக்கருத்தாக்கம் அடிக்கடி பயன்படுகிறது.

8. ஏழ்மையை ஒழிக்க தேவையான நடவடிக்கையை எடுக்காமல் இருக்க (அ) மிகக்குறைவான நடவடிக்கை எடுக்க ஒரு காணத்தை சமுதாயத்திற்கு அளித்துள்ளது.

5. **சமூக அமைப்பு எவ்வாறு வறுமைக்கு காரணமாகிறது?**

**சமூக அமைப்பு**

1. நேர்மையற்ற (ம) தவறான சமூக சூழ்நிலைகள்
2. நமது பொருளாதார அமைப்பு
3. கல்வி வளர்ச்சி குறைவு
4. வேலைவாய்ப்புகள் குறைவு
5. குறைந்த ஊதியத்திற்கு அதிக வேலை பார்ப்பது
6. நீண்ட நாட்களுக்கு வேலை வாய்ப்பே இல்லாமல் இருப்பது
7. சமூக (ம) பொருளாதார கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதில்லை.
8. மாற்றங்கள் தன்னல சக்திகளால் தடுக்கப்படுதல்
9. சமுதாயத்தில் வறுமை நிலையிலான ஒரு பிரிவு இருப்பதால், நடுத்தர வர்க்கத்தினருக்கு சமூக, பொருளாதார, அரசியல் லாபங்கள் கிடைக்கின்றன.

   \- ஹெர்பர்ட் கான்ஸ் கூற்று
10. முக்கிய காரணங்கள்:
    i. சமுதாயத்தில் உள்ள அசுத்தமான வேலைகளை செய்வதற்கான நபர்கள் கிடைத்தல்
    ii. ஒருவரின் உயர்ந்த அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்ளல்
    iii. ஒருவரை அதிகாரம் மிக்க இடத்தில் இருக்கச் செய்தல் போன்றவற்றிற்கு சமுதாயத்தில் ஒரு பிரிவினருடைய ஏழ்மைநிலை பயனுள்ளதாக உள்ளது.
11. தங்களது சுயநலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக சமூக கட்டமைப்பு, மதிப்பீடுகள். விதிகள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்படுவதை விரும்பாத தனிநபர்கள் (அ) குழுக்களே வறுமைக்கான காரணமாகும்.

6. **ஊரக வறுமை – காரணங்கள், வறுமை ஒழிப்புத்திட்டங்கள் விவரி.**

**ஊரக வறுமை**

1. கிராமங்களில் காணப்படும் வறுமை
2. இந்தியாவில் வறுமை என்பது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாதநிலை
3. வறுமைக்கோடு என்பது மக்களின் வருமானம் (அ) நுகர்வு நிலையைப் பொறுத்தது.

4. கிராமங்களின் வாழும் மக்கள் நாள் ஒன்றுக்கு 2400 கலோரி அளவு (அ) அதற்கு குறைவாக எடுத்துக் கொள்பவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் ஆவர்.

**ஊரக வறுமைக்கான காரணங்கள்:**

1. **நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை**
   - i. ஊரக நிலப்பகுதிகள் ஒரு சிலரிடமே குவிந்து காணப்படுகிறது.
   - ii. பெரும்பான்மை கிராம மக்கள் தங்கள் குடும்ப தேவைகளுக்காக அந்நிலங்களில் கூலிக்கு வேலை செய்கின்றனர்.
2. **பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை**
   - i. அதிகரிக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பண்ணை சாராத தொழில்கள் வளரவில்லை.
   - ii. மிகுதியான தொழிலாளர்கள் ஊரகப் பகுதிகளில் இருப்பதால் குறைவான கூலியையே பெறுகின்றன.
3. **பொதுத்துறைகளில் முதலீடு இன்மை**

   மனித வளத்தை மேம்படுத்துவதற்கான முதலீடு நமது நாட்டில் மிகக் குறைவாக இருப்பதால், வறுமைக்கு அடிப்படை காரணமாக உள்ளது.
4. **பணவீக்கம்**

   பொருட்களின் விலை அதிகரிப்பதால், ஊரக மக்களின் வாங்கும் சக்தி குறைந்து, ஊரக வறுமைக்கு வழிவகுக்கிறது.
5. **குறைந்த உற்பத்தித்திறன்**

   ஊரக தொழிலாளர்கள் (ம) பண்ணைகளின் குறைந்த உற்பத்தித்திறன் வறுமைக்கு காரணமாகிறது.
6. **வளர்ச்சியின் நன்மைகளில் உள்ள சமனற்றநிலை**
   - i. பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் நன்மைகளை நகர்ப்புற அனுபவிப்பதலல், சொத்துக்கள் அவர்களிடமே குவிந்து உள்ளன.
   - ii. குறைபாடுள்ள பொருளாதார அமைப்புகள் (ம) கொள்கைகளால், வளர்ச்சியின் நன்மைகள் ஏழை மக்களை சென்று அடையவில்லை.
   - iii. ஏழை மக்களின் பங்களிப்பையும் சரியாகக் கணக்கிடப்படவில்லை
7. **குறைந்த பொருளாதார வளர்ச்சிவீதம்**
   - i. இந்திய பொருளாதார வளர்ச்சி பணக்காரர்களுக்கு சாதகமாகவே உள்ளது.

ii. நாடு அடைந்த வளர்ச்சி (ம) முன்னேற்றத்தின் நன்மைகள் ஏழை மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

8. **பெரிய தொழிற்சாலைகளுக்கே முக்கியத்துவம்**

   i. இந்தியாவில் பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படும் முதலீடு நகர்ப்புறத்தின் நடுத்தர (ம) உயர் வருமான பிரிவினரின் தேவைகளையே பூர்த்தி செய்கிறது.

   ii. இந்த தொழிற்சாலைகள் இயந்திரங்களையே அதிகம் பயன்படுத்துவதால், வேலைவாய்ப்பு உருவாக்கம் குறைவாகவே உள்ளது.

   iii. இதனால் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பினை பெறமுடியாத நிலையிலும், வறுமையிலிருந்து மீள முடியாமலும் உள்ளனர்.

9. **சமூக குறைபாடுகள்**

   சமுதாயத்தில் நிலவும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை ஆக்கமற்ற உற்பத்தி செலவை அதிகரிக்கிறது.

**ஊரக வறுமை ஒழிப்புத்திட்டங்கள்**

1. 20 அம்சத்திட்டம் - 1975
2. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் - 1976
3. வேலைக்கு உணவுத்திட்டம் - 1977
4. ஊரக இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு பயிற்சி - 1979
5. தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் - 1980
6. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் - 1983
7. இந்திரா அவாஸ் யோஜனா - 1985
8. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் - 1989
9. பாரத்நிர்மான் யோஜனா - 2005
10. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்புத்திட்டம் - 2005
11. தேசிய ஊரக நலத்திட்டம் - 2005
12. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் - 2005
13. ராஜீவ் அவாஸ் யோஜனா - 2009
14. தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் - 2011
15. தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டம் - 2013

**6. இந்தியா (ம) தமிழ்நாட்டின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பற்றி குறிப்பு எழுதுக.**

**தமிழ்நாட்டின் வறுமை ஒழிப்புத்திட்டங்கள்**

**i. புதுவாழ்வு திட்டம் - 2005**

1. உலக வங்கியின் உதவியுடன், ஊரக மேம்பாடு (ம) பஞ்சாயத்து துறை இணைந்து வறுமையை ஒழிக்கவும் அதிகாரத்தை மேம்படுத்தவும் தொடங்கிய திட்டம்.
2. இத்திட்டம் சென்றடைய இலக்காக நிர்ணயிக்கப்பட்டவர்கள் ஏழை மக்கள், மாற்றுத்திறனாளிகள், ஒதுக்கப்பட்ட சமூக மக்கள் ஆகும்.

**ii. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத் திட்டம் 2012 – 13 60 : 40**

1. ஊரகப் பகுதிகளின் வருமானத்தை உயர்த்த கொண்டுவரப்பட்டது.
2. நாகப்பட்டினம், அரியலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் 266 பஞ்சாயத்துகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
3. மத்திய, மாநில அரசு இணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுதியது.
4. அரசுகளின் நிதி பங்களிப்பு 60 : 40
5. ஊரக மக்களுக்கு அடிப்படை வாழ்வாதார கடட்மைப்புகளை உருவாக்கித்தருதல்
6. இத்திட்டத்தின் மூலம் கிராம, வட்டார, மாவட்ட அளவில் சுயஉதவிக்குழுக்கள் துவங்கப்பட்டது.

**இந்தியாவின் வறுமை ஒழிப்புத் திட்டங்கள்**

1. **20 அம்ச திட்டம் - 1975**
   - i. பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல்
   - ii. உற்பத்திக்கு ஊக்கம் அளித்தல்
   - iii. கிராமப்புற மக்களின் நல்வாழ்விற்கு உதவுதல்
   - iv. நகர்ப்புறங்களில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கு கடனுதவிகளை வழங்குதல்
   - v. சமூக (ம) பொருளாதார குற்றங்களை கட்டுப்படுத்துதல்
2. **ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் - 1976 (IRDP)**

வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களை தெரிய செய்து, அவர்களுக்கு வேளாண்மை, தோட்டத்தொழில், கால்நடை, வளர்ப்புத்தொழில், நெசவுத்தொழில், கைவினைத் தொழில் போன்றவற்றில் சுயவேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்து மேன்மை அடையச்செய்தல்.

3. **அந்தியோதயா திட்டம் - 1977**

1. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களுக்கு உதவ ராஜஸ்தான் அரசால் துவக்கப்பட்டது.
2. ஒவ்வொரு கிராமங்களிலும் மிகவும் வறுமையில் உள்ள 5 குடும்பங்களை தேர்வு செய்து அவர்களுக்கு உதவுதல்.

4. **ஊரக இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு பயிற்சி – 1979 (TRYSEM)**

i. இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்து, வேளாண்மை, தொழிற்துறை, சேவைப்பிரிவில் ஈடுபடச்செய்து வேலைவாய்ப்பை பெருக்குதல்.

ii. வயது 18 - 35

iii. முன்னுரிமை : SC / ST, பெண்கள் முன்னாள் படை வீரர்கள்

iv. தகுதி: 9ம் வகுப்பு தேர்ச்சி

5. **தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் - 1980**

கிராமப்புறங்களில் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க கொண்டுவரப்பட்ட திட்டம்.

6. **ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் - 1983**

கிராமப்புறங்களில் நிலமல்லாதோருக்கு வேலைவாய்ப்பளிக்கும் உத்திரவாத திட்டம்.

7. **ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் - 1989**

மிகவும் வறுமையில் வாடும் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள ஒரு நபர்க்கு அவர்களது வீட்டிற்கு அருகில் ஆண்டிற்கு 50 – 100 நாட்கள் வரை வேலைவாய்ப்பளிக்கும் திட்டம்.

8. **முக்கிய திட்டங்கள்**

**i.** ஐந்தாண்டு திட்டங்கள்

**ii.** வங்கிகள் தேசியமயம்

**iii.** சட்டங்கள்

9. **வறுமை ஒழிக்க அரசு மேற்கொணட முயற்சிகள் யாவை?**

**கிராமப்புற வறுமைக்கான காரணங்கள்**

**1.** விரைவான மக்கள்தொகை வளர்ச்சி

**2.** மூலதன பற்றாக்குறை

**3.** விவசாயத்தைத் தவிர மாற்றுவேலைவாய்ப்பின்மை

**4.** விவசாயத்தின் மீதான மக்கள்தொகை அழுத்தம்

5. கல்வியறிவின்மை
6. இளவயது திருமணம்
7. கூட்டுக் குடும்பம்
8. பிராந்திய வேறுபாடுகள்
9. முதலீட்டில் அலட்சியம்
10. பொதுவிநியோக முறையை முறையாக செயல்படுத்துவதில் உள்ள குறைபாடு

**அரசு நடவடிக்கைகள்**

**நகர்ப்புற வறுமைக்கான காரணங்கள்**

1. கிராமப்புற இளைஞர்கள் நகரத்தை நோக்கி இடம்பெயர்தல்
2. தொழில்சார்ந்த கல்வி, தொழிற்பயிற்சி இன்மை
3. நகரங்களில் நிர்ணயிக்கப்பட்ட வேலைவாய்ப்புகள்
4. அதிவேக மக்கள்தொகை வளர்ச்சி
5. வீட்டுவசதி குறைவு
6. பொதுமக்களுக்கான திட்டங்களை முறையாக செயல்படுத்தாமை

**அரசு நடவடிக்கைகள்**

1. தொழிற்கல்விக்கு முக்கியத்துவம்
2. நேரு ரோஜ்கர் யோஜ்னா – 1989
3. நகர்ப்புற ஏழைகளுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் - 1986
4. வீடு கட்டுவதற்கு நிதியுதவி
5. நகர்ப்புற படித்த இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் - 1983
6. தேசிய சமூக உதவித்திட்டம் - 1995
7. நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளுக்கு அடிப்படை சேவைகளை வழங்குதல்
8. பொன்விழா ஆண்டு வேலைவாய்ப்புத்திட்டம் - 1992
9. பிரதம மந்திரி வேலைவாய்ப்புத்திட்டம்
10. பிரதம மந்திரியின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டம்

**9. வறுமையை ஒழிப்பதற்கான பயனளிக்கக்கூடிய வழிமுறைகள் யாவை?**

**வழிமுறைகள்**

1. வருமான பங்கீடு
2. தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்
3. வளங்களையும் திட்ட செலவினையும் குறைத்தல்
4. பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல்

5. சுதந்திரமான வங்கி அமைப்புகளை உருவாக்குதல்
6. அரசாங்க முதலீட்டை மக்களுக்கு விற்று பகிர்ந்தளிக்கும் முறையில் புதிய அமைப்பு முறையை உருவாக்குதல்
7. வேலைவாய்ப்பை உருவாக்குதல்
8. மக்கள்தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்
9. கருப்பு பணத்தை நீக்குதல்
10. அனைவருக்குமான நீதி
11. திட்டமிடுதலை பரவலாக்குதல்
12. பெண்கள் மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்குதல்

**பிறவழிமுறைகள்:**

1. தகவல் சேகரித்தல்
2. அசையா சொத்துகளின் மீது கவனம்
3. போதுமான நிலம் (ம) நீர் வசதியைப் பெறும் உரிமை
4. அடிப்படை சுகாதாரம் (ம) கல்வி
5. பிராந்திய ஈடுபாடு
6. உள்கட்டமைப்பு வழங்குதல்
7. கடன் இலக்கு
8. பரவலாக்கப்பட்ட உணவுத்திட்டங்கள்
9. தொழில்மயமாக்குதல்
10. தொழில்துறை முதலீடுகள் அதிகரித்தல்
11. தேவையற்ற அரசு செலவினங்களை குறைத்தல்
12. மின் உற்பத்தியை அதிகரித்தல் (ம) மின்பகிர்வில் கட்டுப்பாடுகள்
13. இளைஞர்களுக்கு கணினி பயிற்சி அளித்தல்
14. வளர்ச்சிக் திட்டங்களில் மக்களை பங்கு பெறச் செய்தல்
15. பஞ்சாயத்துராஜ் நிறுவனங்களை பலப்படுத்துதல்
16. அரசுசாரா நிறுவனங்களை பங்குபெறச் செய்தல்
17. தேசிய மயமாக்கல்

**7. வறுமை குறித்த குழுக்கள் பற்றி எழுதுக.**

1. **1978 ல் வரையறை**– கலோரிகள் 2400 / 2100

   இந்தியாவில் ஒரு தனி நபருக்கு, கிராமப் பகுதி எனில் 2400 கலோரிகள் (ம) நகரப் பகுதி எனில் 2100 கலோரிகள் தேவை என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்டது.

**குழுக்கள்:**

1. அலேக்குழு – 1977 – கலோரிகள்
2. லக்டவாலா குழு – 1989
3. டெண்டுல்கர்குழு – 2005 – தனிநபர் செலவீனம்
4. சக்சேனா குழு
5. ஹசிக் குழு
6. ரங்கராஜன் குழு – 2012 கலோரிகள், புரதம், கொழுப்பு + செலவீனம்

2. **2005 க்கு முன்பு வரை – தனிநபர் செலவினம்**

**i.** இந்திய அரசின் வறுமை குறித்த கணக்கீடானது உணவு பாதுகாப்பிற்காக கணக்கிடப்பட்டது.

**ii.** உயிர் வாழத்தேவையான கலோரிகளை பெறுவதற்காக நுகர்வு செய்யும் தனிநபர் செலவினங்களைச் கொண்டு வறுமையின் அளவு நிர்ணயிக்கப்பட்டது.

**டெண்டுல்கர் குழு – 2005**

கலோரியை கணக்கிடாமல் நுகரும் உணவு அளவை வைத்து, கிராம (ம) நகர்ப்புறங்களில் வறுமையின் அளவுகோலை நிர்ணயித்தது.

3. **ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் முதல் (NSSO):**

1. NSSO வால் திரட்டப்பட்ட நுகர்வோர் செலவீனம் குறித்த தகவல்களை அடிப்படை.
2. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கை திட்டக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டது.

**ரங்கராஜன் குழு – 2012**

1. ரங்கராஜன் தலைமையிலான 5 பேர் கொண்ட குழு
2. அறிக்கை 2014 ல் சமர்பிக்கப்பட்டது.
3. வறுமை அளவிடும் முறை குறித்து ஆராய அமைக்கப்பட்டது.
4. திட்டக்குழு ஏழை மக்களின் செலவினத் தொகையாக ஒரு நாளைக்கு ரூ 22 என நிர்ணயித்தால், தேசிய அளவில் எதிர்ப்பு எழுந்தது.
5. இதனால் ரங்கராஜன் குழு பல்வேறு வயது (ம) பாலினம் சேர்ந்தவர்களிடையே தேவைப்படும் கலோரிகள், புரதம், கொழுப்பு போன்றவற்றின் தேவையை கணித்தது.

6. இக்குழு மதிப்பிட்டின்படி, ஏழை மக்களின் எண்ணிக்கை டெண்டுல்கர் குழு நிர்ணயித்ததை விட கிராமங்களில் 19% அதிகமாகவும், நகர்புறங்களில் 49% அதிகமாகவும் இருந்தது.

**8. ஏழைகளின் பிரச்சனைகள் (ம) வறுமையின் வலிகள் விவரி.**

**i. சமூக பாகுபாடு**

1. ஏழைகள் சோம்பேறித்தனம், திறமையற்ற, சமூகத்திற்கு சுமையானவர்கள் என்ற கண்ணோட்டம் உள்ளது.
2. ஏழைகள் சமுதாயத்தில் இழிவாக பார்க்கப்படுகின்றனர்.
3. மேலும் பாகுபாடாகப் பார்க்கப்படுகின்றனர்.
4. வலிமை உள்ளவர்களால் பாதிக்கப்படுகின்றனர்.
5. வலிமையான அதிகாரம் செலுத்தும் நபர்களை எதிர்த்தாலோ (அ) அரசியல் சக்திகளை எதிர்த்தாலோ ஏழைமக்கள் நசுக்கப்படுகின்றனர்.
6. கடனுக்கு அதிக வட்டி செலுத்துகின்றனர்.
7. சமூகத்தில் எந்த ஒரு குற்றம் நிகழ்ந்தாலும், ஏழைகளையே சந்தேகப்படும் நிலை உள்ளது.
8. ஏழைகள் நம்பிக்கையானவர்கள் அல்ல என்ற எண்ணம் உள்ளது.
9. ஏழைகள் தங்களது கௌரவத்தை இடித்து, தாழ்வு மனப்பான்மையுடன் காணப்படும் சூழ்நிலை உள்ளது.
10. காரணம் எழுத்தறிவின்மை (ம) பாரபட்சமாக நடத்தப்படுவதாகும்.

**ii. வீடுவசதி இன்மை**

1. நகர்ப்புற மக்கள் தொகைப் பெருக்கத்தினால், வீடுகளின்றி தவிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
2. வசிப்பிடமின்மை, அதிக கூட்ட நெரிசல், சேரிப்பகுதிகள், வாடகைச் சட்டங்கள் ஆகியவை நகர்ப்புற பகுதிகளின் தீவிர பிரச்சனைகளாகும்.
3. ஒரு குடும்பத்தின் வாழ்விட அலகு (ம) அது அமைந்துள்ள அண்டை சூழ்நிலை ஆகியவை வறுமையுடன் தொடர்புடையது.
4. நகர்ப்புற சேரிகள் வசதியற்று (மின்சாரம், குடிநீர்) உள்ளது.
5. இப்பகுதி குழந்தைகள் தெருக்களில் பெரும்பாலான காலத்தை கழிக்கின்றனர்.
6. குடும்பத்தில் சுமூக நிலை இல்லாமல், நடத்தை சரியான முறையில் இல்லாமலும் உள்ளது.
7. சுயமரியாதை இழந்து, நம்பிக்கையற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளது.

**iii. வறுமையின் காரணமாக கலாச்சாரம் சீர்கெடுதல்**

1. வறுமையான சூழ்நிலையில் வாழும் குழந்தைகள் தவறான செயல்களின் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
2. தாங்கள் செய்வது தவறு என்று தெரியாத நிலையில் உள்ளனர்.
3. இத்தகைய துணைக்கலாச்சாரத்தை சட்டவிரோதமான நடத்தையாக கருதுவதில்லை.
4. வன்முறை என்பது அர்களது வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாகிறது.
5. இந்த துணை கலாச்சாரம் ஒருபுறம் வறுமையின் ஒரு விளைவாகவும், மறுபுறம் வறுமைக்கான ஒரு காரணமாகவும் உள்ளது.

**9. வறுமை ஒழிப்புத் திட்டம் மதிப்பீடு ∴ குறைபாடுகள் விவரி.**

**மதிப்பீடு – வறுமை 21.9%**

1. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் கிராமப்புற மக்கள் நலன் கருதியோ, கிராமப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் விதமாகவோ, அமையவில்லை.
2. அதிகார வர்க்கத்தினரின் செயல்களுக்கு உதவும் விதமாகவே கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.
3. தேர்தல் வரும் நேரங்களில் மட்டுமே, ஒவ்வொரு திட்டங்களும் துவங்கப்பட்டுள்ளன.
4. கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் விதமாகவோ கிராமத் தொழில்களை வளர்க்கும் விதமாகவோ திட்டங்கள் அமையவில்லை.
5. கிராமப்புற முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்ட வசதிகள் நீண்ட நாட்கள் நிலைத்திருப்பதாக இல்லை.
6. வேளாண்துறையை சார்ந்தே பெரும்பாலான திட்டங்கள் இருந்ததே தவிர, தொழில்துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறைவு.
7. மேலும் திட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சென்று அடையவில்லை.
8. சமூக (ம) பொருளாதார வேற்றுமைகள் நீக்கப்படவில்லை.
9. வருமானம் பெறுவதில் சமத்துவமின்மை காணப்படுவதும் குறையவில்லை.
10. நீர்வளங்கள், கடனுதவி, மானிய உதவி மிகப்பெரும் சக்தியுள்ள விவசாயிகளால் அபகரிக்கப்பட்டன.
11. சிறு விவசாயிகள் (ம) ஏழைகள் இத்தகைய உதவிகளை (ம) வசதிகளை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை உருவானது.
12. பல்வேறு திட்டங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பும் இல்லை.
13. திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி முறையாக செலவிடப்படவில்லை.
14. திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படவில்லை.

15. கடன் உதவிகள் அளிப்பதில் குறைபாடுகள்
16. ஏழைமக்களும் திட்டத்தின் மீது அக்கறை கொள்ளாமல் இருத்தல்
17. கடன் பெறுவதற்கு லஞ்சம் தரவேண்டிய நிலை
18. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை அடையாளம் காண முயற்சிகள் இல்லை.
19. திட்டங்கள் மேலிருந்து கீழ் அணுகுமுறையில் உள்ளன.

## ஊரக மற்றும் நகர்ப்புற சுகாதாரம்

## Rural and Urban Sanitation

**1. தேசிய கிராமப்புற சுகாதாரத் திட்டம் - 2005**

**தேசிய ஊரக சுகாதாரத்திட்டம் - 2005**

- **i.** கிராமத்தில் உள்ள போதுமான அளவு அரசின் சலுகைகள் கிடைக்கப் பெறாத மக்களின், சுகாதாரத் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டம் துவங்கப்பட்டது.
- **ii.** நாட்டின் பலவீனமான சுகாதார குறியீட்டைப் பெற்ற 18 மாநிலங்களை முன்னிலைப்படுத்தி துவங்கப்பட்டது.
- **iii.** குடிநீர், சுகாதாரம், கல்வி, உணவூட்டம், பாலின சமநிலை என அனைத்தையும் உறுதி செய்தது.

**நோக்கங்கள்:**

1. IMR = 30 / 1000 என நிலைப்படுத்துதல்
2. MMR = 100 / 100000 என கொண்டு வருதல்
3. மலேரியா, டெங்கு இவற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்
4. பைலேரியா நோயை 2015 க்குள் ஒழித்தல்
5. காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மீட்பு 85% ஆக அதிகரித்தல்
6. அனைத்து சமூக உடல்நல மையங்களிலும் ஒரே மாதிரியான மருத்துவ தரத்தை தருதல்
7. மருத்துவ வசதிகளை பஞ்சாயத்துகள் மூலம் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்தல்
8. புதிய கருத்துரு இத்திட்டத்தில் கொண்டு வரப்பட்டது.
9. இதன்படி கிராமப் பகுதிகளில் உள்ள பெண்களுக்கு உடல்நலம் (ம) தடுப்பு மருந்துகள் குறித்த தகவல்களைப் பரப்புதல் ஆஷாவின் பணியாகும்.

10. உடல் நலத்திற்காக செலவு செய்யும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 - 3% ஆக இருக்க வலியுறுத்தப்பட்டது

**திட்ட வெற்றிகள்:**

1. போலியோ ஒழிப்பு
2. ஜப்பானிய என் செபலாட்டிஸ் நோய்க்கு எதிரான தடுப்பூசி 9 மில்லியன் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.
3. குழந்தைகளுக்கு பரவும் டெட்டனஸ் ஒழிப்பு
4. 2 மில்லியன் பிரசவங்கள் ஆரம்ப சுகாதார மையங்களிலோ (அ) மருத்துவமனைகளிலோ நடைபெற்றன.
5. 1 மில்லியன் 'கிராம உடல் நலம் (ம) சுகாதாரக் குழுக்கள்'மூலம் பள்ளிகளில் சுகாதாரத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

**திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

1. ஏற்கப்பட்ட சமூக சுகாதார செயற்பாட்டாளர்கள் (ஆஷா)
2. ரோஜி கல்யாண் சமிதி
3. துணை மையங்களுக்கு மானியம்
4. ஜனனி சுரக்ஷா யோஜனா
5. தேசிய நடமாடும் மருத்துவ மையங்கள்
6. தேசிய அவசர விபத்து ஊர்தி சேவை
7. ஜனனி சிசு சுரக்ஷா காரியகிரம்
8. ராஷ்ட்ரிய பால்ஸ்வஸ்தயா காரியகிரம்
9. தாய் - சேய் நல சுகாதாரப் பிரிவு
10. தேசிய இரும்பு சத்து மாத்திரைகள் வழங்கல்

**2. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் - 2012**

2012 கேபினட் கூட்டத்தில் தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தை தொடர்வதாகவும், துணைத் திட்டங்கள் தொடங்கவும், 2017 மார்ச் வரை இத்திட்டங்கள் தொடர்வதாகவும் முடிவு எடுக்கப்பட்டது.

**திட்டத்தின் கீழான கோரிக்கைகள்:**

1. ஒவ்வொரு 5000 லிருந்து 60000 மக்கள் தொகையுள்ள பகுதிகளுக்கும் ஒரு நகர்புற ஆரம்ப சுகாதாரமையம் அமைத்தல்
2. பெருநகரங்களில் 5 முதல் 6 நகர ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ள பகுதிகளில் ஒரு நகர சமுதாய சுகாதார மையங்கள் அமைத்தல்
3. செவிலியர் சேவை மையங்கள் 10000 மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமைத்தல்

4. 200 முதல் 500 வீடுகள் உள்ள பகுதிகளில் ஒரு ஏற்கப்பட்ட சமூக சுகாதார செயற்பாட்டாளர் அமைத்தல்
5. இத்திட்டம் நகர்ப்புற ஏழைகளின் ஆரம்ப சுகாதாரத்தில் அதிக கவனம் செலுத்துகிறது.
6. 50000 மக்களுக்கு அதிகம் வசிக்கும் இடங்களில் 779 நகரம் (ம) மாநகரங்களில் தொடங்கப்பட்டு 7 கோடியே 75 லட்சம் மக்களைச் சென்றடையும்.

**திட்டத்தின் முடிவுகளாக எதிர்பார்ப்பது**

i. குழந்தை இறப்பு விதத்தைக் குறைத்தல்
ii. தாயின் இறப்பு வீதம் குறைத்தல்
iii. மகப்பேறு மருத்துவத்தினை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல்

**முக்கிய அம்சங்கள்:**

i. நகரத் திட்டங்களின் தேவைகள் கணக்கெடுப்பின் மூலம் செயல்படுத்தப்படும்.
ii. நகர உள்ளாட்சி அமைப்புகள் முழுவதும் பங்களிப்பு செய்யும்
iii. புதுமையாக்கப்பட்ட பொது ஆரம்ப சுகாதாரம் இலக்கு மக்களின் வீட்டருகில் கிடைக்கச் செய்யும்.
iv. தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தில் துவங்கிய செயல்பாடுகள். நிர்வாக அமைப்புகள், நிறுவனமாக்கப்பட்ட செயல்முறைகள் அனைத்தும் தேசிய நகர்ப்பற திட்டத்தினை வலுப்படுத்தும்.

**3. தூய்மை இந்தியா பற்றி விவரிக்க விடை தருக.**

**ஸ்வச்பாரத்**

i. இந்தியாவில் துவங்கப்பட்ட மிகப்பெரிய தூய்மைக்கான இயக்கம்
ii. 2014, அக்டோபர் 2ல் இத்திட்டம் துவங்கப்பட்டது.
iii. தூய்மையை பரப்புவதற்கென நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 100 மணி நேரத்தை, அதாவது வாரத்திற்கு 2 மணி நேரத்தை ஒதுக்குமாறு பிரதமர் கேட்டுக் கொண்டார்.
iv. Rs 12,000 – ஊக்கத்தொகை
v. மகாத்மா காந்தியின் 150வது பிறந்த தினமான, 2019 அக்டோபர் 2ம் தேதிக்குள் தூய்மையான இந்தியா என்ற இலக்கை அடைவதை நோக்கமாகக் கொண்டதே இந்தப் பிரச்சாரம் ஆகும்.
vi. 3 கோடிக்கும் மேற்பட்ட கழிப்பறைகள் கட்டப்பட்டன.

**vii.** சுற்றுப்புற சுகாதாரம் பெற்ற பகுதிகள் 42% லிருந்து 60% உயர்ந்துள்ளது.

**தூய்மையான கிராமப்புற இந்தியா:**

1. இந்த இயக்கம் துவங்கியதிலிருந்து இதுவரை 3.6 கோடிக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு உள்ளே அமைந்த கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
2. 3 மாநிலங்களில் பொது இடங்களில் காலைக் கடன்களை கழிக்கும் பழக்கம் முற்றிலும் அகற்றப்பட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.
3. தனிப்பட்ட கழிப்பறைகளுக்கான ஊக்கத்தொகை ரூ 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
4. அக்டோபர் 2, 2014 முதல் அக்டோபர் 2015 வரையிலான காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட 60 லட்சம் தனிநபர் கழிப்பறைகளுக்கு பதிலாக 80 லட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
5. இது திட்டமிடப்பட்ட இலக்கு 117% நிறைவேற்றப்பட்ட சாதனையாகும்.
6. 100 உயரிய தூய்மை இடங்கள் என வரலாற்று (ம) கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் உலகத் தரத்துடன் உயரிய தூய்மைபெற உள்ளன.
7. கங்கை நதிக்கரைகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் பொதுவிடங்களில் காலைக்கடன்களை கழிக்கும் வழக்கத்தை முற்றிலும் அகற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**தூய்மையான நகர்ப்புற இந்தியா**

1. தனிநபர்களுக்கான வீடுகளுக்குள்ளே 31 லட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
2. பொதுப் பயன்பாட்டிற்கான, பொது மக்களுக்கென 1.25 லட்சம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
3. 39,995 நகர்புற வார்டுகள் 100% வீடுதோறும் திடக்கழிவை சேகரிப்புடன் செயல்பட்டு வருகிறது.
4. இந்தக்கழிவிலிருந்து உரம் தயாரிப்பு பல டன்களாக அதிகரித்துள்ளது.
5. 614 நகரங்கள் பொது இடங்களில் காலைக்கடன் கழிக்கும் பழக்கத்திலிருந்து விடுபட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.
6. ஆந்திரா குஜராத் ஆகிய மாநிலங்களில் உள்ள அனைத்து நகரங்களும் இந்தப் பழக்கத்திலிந்து விடுபட்டுள்ளன.

**2. தூய்மையான கல்விநிலையம்**

நாடு முழுவதும் உள்ள 11.21 லட்சம் அரசுப் பள்ளிகளில் பயிலும், 13.77 கோடி சிறுவர் - சிறுமியர் இப்போது கழிப்பறை வசதி பெற்றுள்ளனர்.

**3. தூய்மை இந்தியா இயக்கம் - நிதி (ரூ. 365 கோடி)**

- **i.** பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள், செயல்படாத கழிப்பறைகள் இவற்றினை புதுப்பிக்க ரூ 365 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- **ii.** தூய்மையான இந்தியாவிற்கான கூடுதல் வரியின் மூலம், திட்டத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகிறது.

**4. கிராமப்புற குடிநீர் வசதி**

- **i.** 2017, பிப்ரவரி நிலவரப்படி முழுமையாக குடிநீர்வசதி பெற்ற குடியிருப்புகள் 73.66% லிருந்து 77.01% ஆக உயர்வு.
- **ii.** கிராமப்புற மக்களில் 55% பேருக்கு குழாய் மூலமான குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது.
- **iii.** ஆர்சனிக் / ஃப்ளோரைட் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள 28,000 குடியிருப்புகளுக்கு 2020 க்குள் தூய்மையான குடிநீர் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**5. கங்கையை வணங்குவோர் திட்டம்**

கங்கையை சுத்தப்படுத்துவதற்கென பிரம்மாண்டமான, கங்கை புத்துயிர்ப்பிற்கென திட்டம் தொடங்கப்பட்டது.

**6. பசுமை இந்தியா**

- **i.** சுற்றுச்சூழலுக்கான அனுமதிகள் அனைத்தும். இணையத்தின் மூலமாகவே செய்வதற்கான ஏற்பாடு.
- **ii.** தேசிய காற்றுத்தர அட்டவணை 2015ல் துவங்கப்பட்டது.
- **iii.** உஜாலா திட்டம் - அனைவருக்கும் எல்இடி விளக்குகளை குறைந்த விலையில் வழங்குதல்
- **iv.** இத்திட்டம் மூலம் கரியமில வாயு வெளியேற்றம் குறைகிறது.

**இந்தியாவின் சுகாதாரமற்ற சூழ்நிலைக்கான காரணங்கள்**

1. நீதிபேதாமை
2. கிராமப்புற சுகாதாரம்
3. நகர்ப்புற கவனமின்மை
4. மக்களின் மனநிலைமை
5. சுற்றுச்சூழல் பாதிப்ப பற்றி அரசாணை
6. நீர்பற்றாக்குறை

7. அரசியல் நிலை

**மனித துப்புரவு தொழிலுக்கான காரணம் என்ன? சமூகத்தில் நிலவும் இப்பிரச்சனைக்கான தீர்வுகள் யாவை?**

**மனிதக் கழிவுகளை மனிதரே அகற்றும் முறை**

1. இது சாக்கடைகளை சுத்தம் செய்வது (அ) பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தாமல் கழிவறைகளிலிருந்து கழிவுகளை அகற்றும் செயலாகும்.
2. அதாவது சத்தகரிக்கப்படாத மனிதக் கழிவுகளை குழிகளிலிருந்து அற்றுவது

**காரணங்கள்:**

1. நீர்சார் கழிவறைகள் இல்லாதிருத்தல்
2. சுகாதாரமற்ற கழிவறைகளின் தொடர்ச்சியான இருப்பு
3. கழிவுநீர்த் தொட்டிகளின் மோசமான வடிவமைப்பு
4. பல நகரங்கள் முழு நகரத்தையும் உள்ளடக்கும் வகையிலான சாக்கடை இணைப்புகளை கொண்டிருக்கவில்லை.
5. மறுவாழ்வு (ம) வேலைவாய்ப்புகள் இல்லாமல் இருப்பது
6. மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றுபவர்களே இல்லை என மறுப்பது
7. சாதிய அமைப்புகள் தொடர்ச்சியாக நிலவுவது
8. இதில் ஈடுபடுபவர்கள் 90% பெண்களே
9. போதிய விழிப்புணர்வு இல்லாதிருத்தல்
10. கல்வியறிவின்மை
11. இதற்கு தொழில் நுட்பத்தை பயன்படுத்தவில்லை
12. ஒப்பந்தக் காரர்களின் ஆதிக்கம்
13. சபாய் கரம்சாரி தேசியக் குழுவின் பலவீனம்
14. இறப்புக்கு காரணமானவர்கள் மீத FIR பதிவு செய்யப்படுவது இல்லை.

**தீர்வுகள்:**

1. மலம் அள்ளுபவர்கள் (ம) அவர்களைச் சார்ந்தவர்களை மீட்டெடுத்தல்
2. மீட்டெடுக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குதல்
3. வெறும் கைகளில் மலம் அள்ளுபவர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் - 2007
4. மனிதக் கழிவுகளை அகற்றுபவர்களை பணியமர்த்துக்கான தடை (ம) மறுவாழ்வுச் சட்டம் - 2013
5. ஸ்வச் பாரத் அபியான் - 2014 ன் கீழ் கழிப்பறைகள்

6. தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை ஏற்பாடு செய்தல்
7. இத்தொழில் செய்வோரின் சமூக – பொருளாதார நிலையை மேம்படுத்துதல்
8. NGO ஆதரவைப் பெறுதல்
9. பணியாளர்களுக்கு தடுப்பு மருந்துகளை அளித்தல்
10. துப்புரவுப் பணியாளர்களின் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரித்தல்
11. மனிதக் கழிவுகளை அகற்றுபவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவிகள் செய்தல்
12. உயிரி கழிவறைகள் அமைத்தல்
13. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
14. விதிகளை மீறுகின்ற முதலாளிகள் (ம) ஒப்பந்தக்காரர்களை கண்டறிய சிறப்பு சோதனைகளை அரசு செய்தல்
15. மறுவாழ்வு அளித்தல்
16. NGOஈடுபடுத்துதல்
17. இந்திய தண்டனைச்சட்டம் 304 பிரிவு ஏ.